இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,404, SEPTEMBER 30, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation relating to Port Rules for Fishermen.]

*பெரிய பிரித்தானியம் அயர்லந்தும் ஆகிய ஐக்கிய இராஜ்ஜியத்துக்கும், கடல்களுக்கு அப்புறத்தனவாகிய பிரித்தீஷ் ஆதிபத்திய நாடுகளுக்கும் இராஜாவும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவநாயகம் ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே:*

*சென்ற்மைக்கேல் அண் சென்ற்ஜோர்ஜின் மிகமேன்மைபொருந்திய வரிசையின் கிராண்குறோஸ் கமிற்பட்டவர்த்தனரும், இலங்கைக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய உத்தமனாகிய சேர் ஹென்றி எட்வார்ட் மக்கல்லம் அவர்கள் செய்யும்*

## விளம்பரம்.

ஹென்றி மக்கல்லம்,

1865 ம் ஆண்டின் "மாஸ்ற்றெண் அற்றெண்டென்ற்ஸ்" கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவினால் இலங்கா துவீபத்தின் தேசாதிபதியாகிய எம்மிடத்தில் வைக்கப்பட்ட தத்துவங்களைச்செலுத்தியும் அதிகாரமந்திரசபையாரின் ஆலோசனையோடும் சம்மதத்தோடும் கொழும்புத் துறைமுகத்துக்கென்று இதுவரையில் அமைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய சரக்குவத்தைகள், போட்டுக்கள், தோணிகள் முதலியவைபற்றிய மேலதிகமான துறைமுகப் பிரமாணங்களை இதற்குமுன் ஏற்படுத்தி விதிக்கப்பட்டிருக்கும் பிரமாணங்களின் 6 ம் காண்டத்தில் 11 (f), 11 (g), 11 (h) என்று இலக்கமிட்டு சேர்க்கப்பட்ட மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தின் கருத்துக்களுக்கிசைய இப்போ ஏற்படுத்தி விதிக்கப்படுகிறதென்று நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

மேலும் சொல்லப்பட்ட மேலதிகமான துறைமுகப்பிரமாணங்கள் 1911 ஆண்டு ஜனவரிமாதம் 1 ந் தேதியிலன்றும் அதற்குப்பின்னரும் நடைபெற்றுவருமென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் செப்ற்றெம்பர்மாசம் இருபத்திரண்டாந் திகதியாகிய இன்றைக்கு மேற்படி தீவின் கொழும்பிலே கொடுக்கப்பட்டது.

உத்தமனார் கட்டளைப்படி,

எச். எல். கிறுவ்பொர்டு,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

இராஜாவைத் தேவன் ரட்சித்தருள்க.

---

அட்டவணை.

VI. ம் காண்டம்.

11 (e) கொழும்புத் துறைமுகத்தின் "மாஸ்ற்றர் அற்றெண்டென்ற்" அவர்களிடத்தில் அதற்கென்று "லைசென்சு" உத்தரவுச்சீட்டுபெற்றிருக்கும் தோணிகளும் கட்டுமரங்களும் தவிர வேறெந்த தோணியாவது கட்டுமரமாவது பின்குறிக்கப்படும் எல்லைகளுக்குள் கரையில் இழுத்திருக்கப்படாது:—அதாவது,

மேற்குப்பக்கத்து எல்லை—முகத்துவாரத்திலிருக்கும் மீன்பிடி வள்ளத்துறைக்கு செல்லும் றெயில்பாதைக்கு மேலே போடப்பட்டிருக்கும் நடைபாலத்திலிருந்து சரிநேராய் வடக்கு திசையாயோடும் ஒரு இரேகை.

கிழக்குப்பக்கத்து எல்லை—"மோதர வீதி" என்னும் கட்டடத்தின் வடமேற்கு மூலையிலிருந்து அதற்கு முற்பக்கத்திலிருக்கும் கற்பாருக்கூடாய் சரிநேராய் வடக்கு திசையாயோடும் ஒரு இரேகை.

11 (f) "லைசென்சு" உத்தரவுச்சீட்டுப்பெற்ற தோணிகளிலிருந்து அல்லது கட்டுமரங்களிலிருந்து தவிர மேற்சொல்லிய எல்லைகளுக்குள் மீன்பறிக்கவாவது விற்கவாவது படாது.

11 (g) மேற்சொல்லிய பிரகாரம் "லைசென்சு" உத்தரவுச்சீட்டுப்பெறாத தோணிகளாவது கட்டுமரங்களாவது மேலே குறிக்கப்பட்ட கிழக்குப்பக்கத்து எல்லைக்கு அப்புறத்திலும் முகத்துவாரப்பக்கத்திலுமே கரையில் இழுக்கப்படவேண்டியது. மேலும் அவ்விடத்திலேயே அவைகளிலிருந்து மீன்பறிக்கப்படவேண்டியது.

11 (h), 11 (e) இலக்கமிட்ட பிரமாணத்தின் கீழ் கொடுக்கப்படும் "லைசென்சு" உத்தரவுச்சீட்டுகள் தொடர்ச்சியான ஒழுங்குமுறையாயும் வருஷமொரு செலவின்றியும் கொடுக்கப்படவேண்டும். மேலும் "லைசென்சு" உத்தரவுச்சீட்டு பெறுபவர் தனது சீட்டின் இலக்கத்தையும் F H என்னும் அட்சரங்களையும் தெளிவாய்த் தெரியக்கூடியவிதமாய் "மாஸ்ற்றர் அற்றெண்டென்ற்" அவர்கள் கட்டளையிடும் பிரகாரம் தோணியில் அல்லது கட்டுமரத்தின் குறிக்கப்படும் பகுதியில் மையினால் வரையவேண்டும்.

[Proclamation relating to amended Municipal By-laws, Kandy.]

பெரிய பிரித்தானியா அயர்லந்து ஆகிய ஐக்கிய இராச்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிரிட்டிஷ் அதிகாரஞ்செல்லும் நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே :

மகா மகிமைபொருந்திய சென்ற்மைக்கேல் அன் சென்ற்ஜோர்ஜ் வரிசையின் கயிற்பட்டவர்த்தனரும் மகத்துவ ராஜாவின் அடிகோல் படைத்துணைவரும் இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் உத்தமதேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய ஹென்றி மெக்கல்லம் அவர்களால்

## விளம்பரம்.

ஹென்றி மெக்கல்லம்,

1906 ம் ஆண்டு மார்கழி மீ 18 ந் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் ஆறாம் அதிகாரத்திலடங்கிய 218 ம் இலக்கத் துணைப்பிரமாணம் 1901 ம் வருஷத்து 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்திய 1887 ம் ஆண்டின் (7) ம் இலக்க கண்டி முனிசிப்பல் சட்டத்து 122 ம் பிரிவின் கொள்கைப்படி பின்வரும் மட்டுவிலடங்கிய துணைப்பிரமாணத்தை இதன் கீழ்ச்சேர்த்து அத்துணைப்பிரமாணம் முற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின்படி அதிகார சபையின் ஆலோசனைப்படி உத்தமதேசாதிபதியால் பெலப்படுத்தப்பட்டு, ஒன்றின்பின்னொன்றாய் இருமுறை அதாவது 1910 ம் ஆண்டு ஆடி மீ 15 ம் 22 ந் திகதிகளில் "தேவுனமேனாக் கசற்றுப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு சட்டநிருபணசபையின் முன் கொணரப்பட்டதாலும் :

மேற்படி துணைப்பிரமாணம் அப்பிரகாரஞ் சொல்லப்பட்ட சட்டநிருபண சங்கத்துக்கு முன்னுகக் கொண்டுவரப்பட்டு நாற்பது நாளிருந்தும் சொல்லப்பட்ட சபையாற் திருத்த அல்லது அழிக்கப்படாததாலும் :

ஆகையால் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் முதற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின் (2) ம் கீழ்ப்பிரிவால் நம்மீது பொருந்திய அதிகாரத்தைச் செலுத்தி இத்தோடிணைந்திருக்கும் அட்டவணையிற் காட்டிய திருத்தப்பட்ட துணைப்பிரமாணத்தை இப்போது பிரசித்தப்படுத்துகின்றோம் எனவும் இந்தத் தேதிமுதலாக அது வழங்கவேண்டுமென்று வெளிப்படுத்துகின்றோம் என்று நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டு புரட்டாதிமாதம் இருபத்திரண்டாந் திகதியாகிய இத்தினத்தில் கொழும்புநகரிற் கொடுக்கப்பட்டது.

தேசாதிபதி உத்தமனார் கட்டளைப்படி,

எச். எல். கிளுவ்பொர்டு,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

இராஜாவைத் தேவன் ரட்சித்தருள்க.

---

சொல்லப்பட்ட இடாப்பு.

### XIII. ம் அதிகாரம்.

218A. விக்டோறியா டிறைவ் என்று அழைக்கப்படும் றோட்டில் மோட்டோர்கார் வண்டி ஓடுவதும் குதிரை பழக்குவதும் விலக்கப்பட்டிருக்கின்றன.—பட்டணத்திலிருந்து வெளியேபோகு மல்லது பட்டணத்துக்குள் வரும் அல்லது விக்டோறியா டிறைவ் என்று அழைக்கப்படும் றோட்டிலிருக்கும் வீடொன்றுக்குப்போகும் அல்லது அங்கிருந்து வருகிறவைகளே அல்லாது வேறு யாதொரு மோட்டோர்கார் வண்டிகள் சாயந்தரம் 4·30 மணிக்கும் 6·30 மணிக்கு மிடையிற் சொல்லப்பட்ட றோட்டுவழியே போகப்படாது.

இளாதொரு குதிரை சொல்லப்பட்ட விக்டோறியா டிறைவ் என்று அழைக்கப்படும் றோட்டில் சாயந்தரம் 4·30 மணிக்கும் 6·30 மணிக்குமிடையில் பழக்கப்படாது.

---

[Proclamation relating to amended Municipal By-laws, Kandy.]

பெரிய பிரித்தானியா அயர்லந்து ஆகிய ஐக்கிய இராச்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிரிட்டிஷ் அதிகாரஞ்செல்லும் நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே :

மகா மகிமைபொருந்திய சென்ற்மைக்கேல் அன் சென்ற்ஜோர்ஜ் வரிசையின் கயிற்பட்டவர்த்தனரும் மகத்துவ ராஜாவின் அடிகோல் படைத்துணைவரும் இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் உத்தம தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய ஹென்றி மக்கல்லம் அவர்களால்

## விளம்பரம்.

ஹென்றி மக்கல்லம்,

1906 ம் ஆண்டு மார்கழி மீ 18 ந் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் ஆறாம் அதிகாரத்திலடங்கிய 248 ம் இலக்கத் துணைப்பிரமாணம் 1901 ம் வருஷத்து 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்திய 1887 ம் ஆண்டின் (7) ம் இலக்க கண்டி முனிசிப்பல்சட்டத்து 122 ம் பிரிவின் கொள்கைப்படி பின்வரும் மட்டுவிலடங்கிய துணைப்பிரமாணத்தை இதன் கீழ்ச்சேர்த்து அத்துணைப்பிரமாணம் முற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின்படி அதிகாரசபையின் ஆலோசனைப்படி உத்தம தேசாதிபதியால் பெலப்படுத்தப்பட்டு, ஒன்றின்பின்னொன்றாய் இருமுறை அதாவது 1910 ம் ஆண்டு ஆனி மீ 2 ம் 10 ந் திகதிகளில் "தேவுனமேனாக் கசற்றுப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு சட்டநிருபணசபையின்முன் கொணரப்பட்டதாலும் :

மேற்படி துணைப்பிரமாணம் அப்பிரகாரஞ் சொல்லப்பட்ட சட்டநிருபண சங்கத்துக்கு முன்னுகக் கொண்டுவரப்பட்ட நாற்பது நாளிருந்தும் சொல்லப்பட்ட சபையாற் திருத்த அல்லது அழிக்கப்படாததாலும் :

ஆகையால் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் முதற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவால் நம்மீது பொருந்திய அதிகாரத்தைச்செலுத்தி இத்தோடிணைந்திருக்கும் அட்டவணையிற் காட்டிய திருத்தப்பட்ட துணைப்பிரமாணத்தை இப்போது பிரசித்தப்படுத்துகின்றோம் எனவும் இந்தத் தேதிமுதலாக அது வழங்கவேண்டுமென்று வெளிப்படுத்துகின்றோம் என்று நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் புரட்டாதிமாதம் இருபத்திரண்டாந் திகதியாகிய இத்தினத்தில் இலங்கைத்தீவின் கொழும்புநகரிற் கொடுக்கப்பட்டது.

தேசாதிபதி உத்தமனார் கட்டளைப்படி,

எச். எல். கிளுவ்பொர்டு,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

இராசாவைத் தேவன் ரட்சித்தருள்க.

சட்டிய அட்டவணை. இடப்பபு.

XV. ம் அதிகாரம்.

248A. விசைவைக்காத ஒவ்வொரு காத்தைகள் நடத்துகிறவரும் நடத்தும் பாதையின் இடப்புறத்து ஓரத்தில் நடத்தவேண்டியது. நடத்துகிறவர்கள் கால்நடையைப்பார்க்கிலும் அதிக கடியாக மாட்டை அல்லது மாடுகளை நடத்தப்படாது. வண்டி நடத்துகிறபோது அதேமக்கத்தில் முன்னுல்போகிற காத்தை நிறுத்தப்படாத பக்ஷத்தில் தானத்திற்கு முன்னடத்தவும் அல்லது நடத்த முயலவும்படாது. நடத்துகிறவர்கள் காத்தையை பாதையின் சேர்ங்கா ணமாக நிறுத்தவும்படாது.

---

[Proclamation of By-laws under the Rural Schools Ordinance, framed by the District School Committee of Anuradhapura.]

பெரிய பிறித்தனும் அயர்லந்தும் ஆகிய ஐக்கிய இராச்சியத்துக்கும், கடல்களுக்கப்பாலுள்ள பிறித்திஷ் ஆதிபத்திய நாடுகளுக்கும், இராசாவும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினுலே:

மிக மேன்மைபொருந்திய சென்ற்மைக்கேல் அன் சென்றஜோர்ஜ் என்னும் வரிசையின் நயிற்பட்டவர்த்தனரும், இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனுதிபதியும் ஆகிய உத்தமனுர் சேர் ஹென்ற்றி எட்வாட் மக்கல்லம் அவர்கள் செய்யும்

**விளம்பரம்**

ஹென்ற்றி மக்கல்லம்,

1907 ம் ஆண்டின் நாட்டுப்புறத்துப் பாடசாலைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வெளிப்படுத்தப்பட்டதும், 1909 ம் ஆண்டு ஜூன்மாசத்து 4 ந் தேதியைக்கொண்டதும் ஆகிய விளம்பரத்தினுலே; அனுராஜபுர ஊர்ப்பிரிவுப் பாடசாலைச் சங்கத்தார்கள் இயற்றிய சில குறித்த உபவிதிகளானவை, தேசாதிபதியவர்களால் அதிகார மந்திரசபையாரது ஆலோசனைப்படி பெலப்படுத்தப்பட்டு, 1909 ம் ஆண்டின் ஜூன்மாதம் 11 ந் தேதிக் கவண்மேந்துக் கசெற்றுப்பத்திரிகையில் விளம்பரிக்கப்பட்டன; அதனுலும், மேற்சொன்ன உபவிதிகளில் முதலாவதிற் குறித்த பாடசாலை அட்டவணையை மேற்படி அனுராஜபுர ஊர்ப்பிரிவின் பாடசாலைச் சங்கத்தார்கள் நீக்கிவிட்டு, அது இருந்தவிடத்தில் இதனேடிணைத்திருக்கும் அட்டவணையைப் பதிலாகவைத்துத் திருத்தியிருக்கிறுர்கள்; அதனுலும்:

இலங்கைத் தேசாதிபதியாகிய நாம், மேற்சொன்ன சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவினுல் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைச் செலுத்தியும், அதிகாரமந்திரசபையாரது ஆலோசனையோடும், மேற்படி உபவிதித் திருத்தத்தை, அதிற்சொல்லிய தேதிமுதலாக வழங்கப்பட்டு வருக என்று இத்தாற் பெலப்படுத்துகிறேம் என்று நீவிர் அறிந்து கொள்வீர்களாக.

மேலும், மேற்சொன்ன விளம்பரத்தை மற்றைய விஷயங்களி னெல்லாப் பெலப்படுத்துகிறேம்.

எங்கள் ஆண்டவரின் வருஷமாகிய ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் செப்றெம்பர்மாசத்து இருபத்தாறுந் தேதியிலன்று மேற்படி தீவில் கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனுர் கட்டளைப்படி,

எச். எல். கிறுவ்பொர்டு,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

இராஜாவைத் தேவன் ரட்சித்தருள்க.

---

அட்டவணை.

நுவரகம் பளாத்தை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எப்பாவல | .. அரசாட்சிப் பாடசாலை | 10. | றுளபனுவை | .. அரசாட்சிப் பாடசாலை |
| 2. | ஏற்றக்கட | .. ஷை | 11. | றணறேவை | .. ஷை |
| 3. | கலதியுல்வெவ | .. ஷை | 12. | றட்டேகமில்லாவ | .. ஷை |
| 4. | இராம்பைக்குளம் | .. ஷை | 13. | தமுத்தேகம | .. ஷை |
| 5. | காப்பதவிலகம் | .. ஷை | 14. | தம்மனுவ | .. ஷை |
| 6. | காந்தாவை | .. ஷை | 15. | தளகஸ்வெவ | .. ஷை |
| 7. | மஹாமங்கடவளை | .. ஷை | 16. | தளாவை | .. சேர்ச்மிஷன் பாடசாலை |
| 8. | மகாதியுல்வெவ | .. ஷை | 17. | துறுவில | .. அரசாட்சிப் பாடசாலை |
| 9. | றம்பாவை | .. ஷை | 18. | உலுக்குளம் | .. சேர்ச்மிஷன் பாடசாலை |

குறுளுப்பளாத்தை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கலன்பிந்துநுவெவ | .. அரசாட்சிப் பாடசாலை | 7. | மொறக்ககாவ | .. அரசாட்சிப் பாடசாலை |
| 2. | ககட்டகஸ்திகிலிய | .. ஷை | 8. | மாவத்தவெவ | .. ஷை |
| 3. | கெபிற்றிககொல்லாவை | ஷை | 9. | மீகஹப்பட்டிய | .. ஷை |
| 4. | கப்புக்கொல்லாவை | .. ஷை | 10. | பலுகாஸ்வெவ | .. ஷை |
| 5. | கோங்வெவ | .. ஷை | 11. | றத்மலகாகவெவ | .. ஷை |
| 6. | மாணங்கட்டியா | .. ஷை | 12. | திற்றகோணவ | .. ஷை |

கலகம் பளாத்தை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கலகிரியாகம | .. அரசாட்சிப் பாடசாலை | 5. | மருதங்கடவள | .. அரசாட்சிப் பாடசாலை |
| 2. | கெல்கம்மில்லாவ | .. ஷை | 6. | மகாஎலகமுவா | .. ஷை |
| 3. | கறவிலகல | .. ஷை | 7. | மகாகனுமுள்ள | .. ஷை |
| 4. | கெக்கிறுவ | .. பப்றிஸ்றமிஷன் பாடசாலை | 8. | மதவாச்சி | .. சேர்ச்மிஷன் பாடசாலை |

தமன்கடுவப் பளாத்தை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தியுலான | .. அரசாட்சிப் பாடசாலை | 5. | மோறகாஸ்வெவ | .. அரசாட்சிப் பாடசாலை |
| 2. | மின்னேரியா | .. ஷை | 6. | தலகொலவெவ | .. ஷை |
| 3. | முத்துகல | .. ஷை | 7. | தம்பல | .. ஷை |
| 4. | மன்னம்பிற்றியா | .. ஷை | 8. | தோப்பாவெவ | .. ஷை |

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

No. 1,253, E. P.—1910 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 17ந் திகதி வியாழக்கிழமை பகல், தன் ஆபீசில் கிழமாகாணத்துத் திரிகோணமலை உதவி கவண்மேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும். 16 காணித்துண்டுகள், கிழமாகாணத்துத் திரிகோணமலை டிஸ்திறிக்கின் கட்டுக்குளம் கிழக்கு தம்பலகமப் பகுதிகளி லிருக்கின்றது.

பிளான் இல. 4,120. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரரின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | ஏக்கரொன்றுக்கு தரிப்புவிலை ரு. |
|---|---|---|---|---|---|
| 94929 | புல்மோட்டை | எம். காதர்சாய்பு | தென்னந்தோட்டம் | 0 0 34 | 20 |
| 94930 | ஷை | ஷை | ஷை | 1 0 32 | 30 |
| 94933 | ஷை | காசிநாதர் கந்தப்பன் | தென்னைக்கேற்றது | 1 2 31 | 18 |
| 94934 | ஷை | கே. தம்பையா | ஷை | 1 0 22 | 18 |

பிளான் இல. 4,174. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 192 | புல்மோட்டை | வாப்பு மகம்மது | நெற்கேற்றது | 0 1 28 | 15 |
| 192½ | ஷை | எம். உசன்சாய்புவால் கூட்டிப் பிடிக்கப்பட்டது | ஷை | 0 0 1 | 18 |
| 193 | ஷை | வாப்பு முகம்மது | ஷை | 0 2 5 | 15 |

பிளான் இல. 4,180. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 211 | திரியாய் | எஸ். ஆறுமுகம் | தென்னைக்கேற்றது | 2 0 9 | 19 |
| 214 | ஷை | கே. கனகசபை | ஷை | 0 3 12 | 17 |
| 215 | ஷை | எம். சதாசிவம்பிள்ளை | ஷை | 2 3 28 | 17 |

பிளான் இல. 4,121. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94936 | நீரோட்டுமுனை | எம். ஜே. செல்லையா | தென்னைக்கேற்றது | 2 0 3 | 15 |
| 94937 | ஷை | ஷை | ஷை | 12 1 8 | 15 |

பிளான் இல. 4,197. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 297 | நாச்சிக்குடா | உசன்சா அப்பு | தென்னைக்கேற்றது | 2 1 6 | 15 |
| 298 | ஷை | சேகுமதார் | ஷை | 2 0 0 | 15 |
| 299 | ஷை | பிச்சைத்தம்பி | ஷை | 1 3 0 | 15 |
| 300 | ஷை | மெங்தின் பிச்சை | ஷை | 1 2 3 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி ஏசென்றிடத்திலும் படங்களைப்பற்றிய விளம்பரங்கள் அளவைத்தலைவரிடத்திலுமிருந் தறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 28 ந உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

No. 1,254, E. P.—1910 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 16 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிழக்கு மாகாணத்து கவண்மேந்து ஏசென்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்குமாகாணத்து மட்டுக்களப்பு டிஸ்திறிக்கி லிருக்கின்றன.

பிளான் இல. 4,126.—மண்முனைப்பற்று தென்பகுதி. உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரு. |
|---|---|---|---|---|---|
| 94954 | கொக்கட்டிச்சோலை | சு. சின்னப்பு | வேளாண்மைக்கேற்ற காடு | 4 2 12 | 25 |
| | | உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 94955 | ஷை | வ. வி. அளகுப்போடி | வயல் | 1 0 29 | 25 |

படம் 4,139. அக்கம்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 95008 | அக்கம் | த. க. ஈசாலெவ்வை | வெம்பும் வெட்டைப்பூமியும் | 20 0 13 | 22 |
| 95011 | ஷை | ஷை மறுபேரும் | ஷை | 6 0 0 | 20 |
| 95012 | ஷை | இஸ்மாயிலெவ்வை மரைக்காயரும் மறுபேரும் | ஷை | 6 0 5 | 15 |
| 95015 | ஷை | ஷை | ஷை | 6 0 6 | 15 |

படம் 923. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11252 | கிரான் | க. நொ தல்லதம்பி | காடு | 0 3 15 | 15 |
| 11254 | ஷை | ஷை | காடு | 0 2 34 | 15 |
| 11256 | ஷை | ஷை | ஷை | 1 0 6 | 15 |
| 11258 | ஷை | ஷை | ஷை | 1 1 32 | 15 |
| 11260 | ஷை | ஷை | ஷை | 1 3 8 | 15 |
| 11257 | ஷை | அ. அரையப்பா | ஷை | 1 3 27 | 15 |
| 11259 | ஷை | ஷை | ஷை | 1 3 27 | 15 |
| 11261 | ஷை | ஷை | ஷை | 1 3 27 | 15 |
| 11263 | ஷை | ஷை | ஷை | 1 2 39 | 15 |
| 11265 | ஷை | ஷை | ஷை | 1 3 30 | 15 |
| 11267 | ஷை | ஷை | ஷை | 1 3 30 | 15 |
| 11269 | ஷை | ஷை | ஷை | 1 3 30 | 15 |

படம் 3,311. எருவூர்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 89934 | காடியனுறு | யா. ம. மூஸ்தபா | காடு | 18 3 28 | 15 |

படம் 3,315. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 89945 | கோவேமடு | உ. நாகமுத்து | வெட்டைப்பூமி | 7 0 8 | 25 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களிடம் விசுவி யறிந்துகொள்ளலாம்.

கொழும்பில், கலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
1910 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 28 ந உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறத்தாரின் வேலைபார்ப்பவர்.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Galle, S. O. 5—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் எவ்வித உடமைதையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஞூ செப்டெம்பர் (புரட்டாதி) ௴ 30 ௳ திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டுவரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் யோன் இன்றில் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமைதையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

யோன் இன்றில்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் காலி டிஸ்திரிக்கு கினிதும்பத்தைச்சேர்ந்த கோனுவேகம என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

I.—பிரதமபடம 490.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 3b .. | கல்கொடகெதறவத்தை (றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) .. | 0 0 1 |

எல்லைகளாவன ; வடக்கு-முடி உரித்துபேசும கல்கொடகெதறவத்தை; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கலவலகேனே; தெற்கு-ஓர் றோட்டு; மேற்கு-மத்தியாசும் மற்றவர்களும் உரித்துபேசும கல்கொடகெதறவத்தை.

II.—பிரதம படம் 490.

| காணித்துண்டு. | காணியினது பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 11e ... | இறிமெற்றிவலஹக்கந்த ... ... ... ... | 0 2 1 |
| 11f ... | ஷெ ... ... ... .. | 0 0 18 |
| | | 0 2 19 |

எல்லைகளாவன : வடக்கு-முடியால் விற்கப்பட்ட கொடஉடவத்தேதெனிய அத்தறகொறட்டுவ, ஓர் றோட்டு ; கிழக்கு-ஓர் றோட்டு, புன்னேவெலகல என்னும் நீரோடை, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட மில்லகொலலங்கஹக்கந்த, ஓர் றோட்டு; தெற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட லந்தேகெதறபெத்த, புனங்கலயனகே சம்மன் டி சில்வா உரித்துபேசும இறிமெற்றிவலஹக்கந்த, பில்லேவலஎல என்னும் நீரோடை; மேற்கு-புனங்கலயனகே வெலுன் டி சில்லாவும் மற்றவர்களும உரித்துபேசும் வன்னிகேவத்தை, முடியால் விற்கப்பட்ட கொடஉடவத்தேதெனிய.

III.—பிரதம படம் 490.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 42z .. | தறமிற்றிவலகொடவத்தை .. .. .. | 0 0 7 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும்-முடி உரித்துப்பேசும் கொத்தகேனே ; தெற்கு-ஓர் பாதை; மேற்கு-ஜி. பொ ஹேனிசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் தறமிற்றிவலகொடவத்தை.

3,876 * டிங்கிரிகின் நான்காம் பாகம் 1003 to 1004 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

---

[Matara, S. O. 9—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடமையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஞூ (செப்டெம்பர்) புரட்டாதி மாசம் 30 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவின் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமைதையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவின்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

தென்மாகாணம் மாத்தறை டிஸ்திரிக்குக் கந்தபொடபத்துதைச்சேர்ந்த மகல்பே என்னும் கிராமத்திலுள்ள, இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, 25 பேர்ச் விசாலமுடையதும் சாமானியமாய் பறங்கெதனிய என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 99 ம் பிரதமபடத்தில் 8 ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி ; இதற் கெல்லைகளாவன : வடக்கு-கருசிங்கே பெய்யவும் மற்றவர்களும் உரித்துபேசும கபுராவத்தை; கிழக்கு தெற்கும்-முடிக்குரிய விகாரேகெலே ; மேற்கு-கருசிங்கே பெயியவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கபுராவத்தை.

3877 * டிங்கிரிகின் நான்காம் பாகம் 1004 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[Hambantota, S. O. 59—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் எவ்வித உடமைதையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஞூ (செப்டெம்பர்) புரட்டாதி௴ 30 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் சி. வீ. பிறெயின் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமைதையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

சி. வீ. பிறெயின்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறுவாப்பத்து கிழக்கைச்சேர்ந்த வெலிபிற்றிய என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் —

I.—பிரதமபடம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 64a4 | .. | துதகொறடுவே | 0 1 4 |
| 64b | .. | டிை | 0 3 15 |
| | | | 1 0 19 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும கெற்றகெலைகேனே; கிழக்கு-முடி உரித்துப்பேசும மாறகெற்றிய கொடகேனே; தெற்கு-கமாற்றிகே செதோறிஸ் உரித்துப்பேசும மாறகெற்றியகொடவத்தை; மேற்கு-முடி உரித்துப்பேசும் கொட்டகலேகொடெல்ல, முடியால் விற்கப்பட்ட ஆறகொறட்டுவ.

II.—பிரதமபடம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 66 | ... | மாறகெற்றியகொட கெகெல்கொறட்டுவ | 0 1 0 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும கெற்றகெலைகேனே; கிழக்கு-முடி உரித்துப்பேசும துகா கேனே; தெற்கு-முடி உரித்துப்பேசும மாறகெற்றியகொடகேனே; மேற்கு-முடியால் விற்கப்பட்ட மாறகெற்றியகொடவத்தை (251,525 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி).

III.—பிரதமபடம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 78 | .. | பதுன்னககேனிய | 0 3 22 |

எல்லைகளாவன: வடக்கு-திஸ்ஸபானக் கிராமஎல்லை; கிழக்கு-திஸ்ஸபானக் கிராமஎல்லை, முடிக்குரிய கநதகாவெனிய, முடி உரித்துப்பேசும் பதுனகாதெனியேகேனே; தெற்கும மேற்கும-முடி உரித்துப்பேசும பதுனகாதெனியகேனே.

IV.—பிரதமபடம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 83 | ... | பகலவத்த | 2 0 36 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் மெகிமுன்னேவத்தேகேனே, மகபடல்கே கபுறுவும மற்றவர்களும உரித்துப்பேசும் மாறாவத்தையும் மெகவத்தையும்; கிழக்கு-முடி உரித்துப்பேசும் வெறகொடடேகொடெல்ல; தெற்கும் மேற்கும்-முடி உரித்துப்பேசும் மெகிமுன்னேவத்தேகேனே.

V.—பிரதமபடம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 51t | ... | மில்லகெதறவத்தை | 1 3 30 |

எல்லைகளாவன: வடக்கு-டபிள்யு. எஸ். கறுஅப்பு உரித்துப்பேசும் கொலொன்னாகொறட்டுவ, முடியும் வீரேகந்தரகே பபுன்காமியும உரித்துப்பேசும கபுகாவத்தை; கிழக்கு-குமாராயகே இஸ்காமியும மற்றவர்களும உரித்துப்பேசும கொடெல்லேவத்தை; தெற்கு-தொன் மீகெல் விக்கிறமவிதாரன உரித்துப்பேசும அம்பறுப்பேபெத்த; மேற்கு-டீ. எம். விக்கிறமவிதாரன உரித்துப்பேசும அம்பறுபபேபெத்த முகலியன.

VI.—பிரதம படம் 391.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 74 | .. | பிபுலகாலகும்புற | 0 0 35 |
| 75a | ... | தப்பன்கலயாயவும பக்மீகாவெவஅட்டறகும்புறவும் | 0 1 25 |
| | | | 0 2 20 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும- முடி உரித்துப்பேசும; மேற்கு-திஸ்ஸபானக் கிராமஎல்லை (பக்மீகாவெவவின் குளக்கட்டு).

3878 * இக்கிலீசின் நான்காம் பாகம் 1005 to 1006 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக

---

[Hambantota, S. O. 60—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடைமையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1910 ம் வருஷம் (செப்ரம்பர்) புரட்டாதிமீ 30 ந் திகதி, துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். இஸ்திவின்சன் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடைமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். இஸ்திவின்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறுவாப்பத்துக் கிழக்கைச்சேர்ந்த கோபெலெஸ்ச என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 434.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 2a | .. | கொடகமபெத்த | 2 0 5 |
| 2b | .. | முள்ளகாவத்தை | 0 1 15 |
| | | | 2 1 20 |

* இக்கிலீசின் நான்காம் பாகம் 1007 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லைகளாவன : வடக்கு-கோபெலெஸ்ஸவெவவின் குளக்கட்டு; கிழக்கு-மகாஜக்குறக் கிராமஎல்லை, ஓர் பாதை, முடி உரித்துப்பேசும மகாஜக்குறபெத்த, மகாஜக்குறக் கிராமஎல்லை; தெற்கு-முடி உரித்துப்பேசும மகாஜக்குறபெத்த, ஓர் பாதை, கதுறுவெல பன்சலவும் மற்றவர்களும் உரித்துப்பேசும கோபெலெஸ்ஸவெல; மேற்கு-கதுறுவெல பன்சலயின் பராபரிப்புக்காரரும் மற்றவர்களும் உரித்துப்பேசும கோபெலெஸ்ஸகொடெல்லக்குவைகாறட்டுவ.

3,879

[Anuradhapura, S. O. 40—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடைமையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஆண்டு (செப்தெம்பர்) புரட்டாசி மீ 30 ம் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் யோண் இன்றில் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடைமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

யோண் இன்றில்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை கெக்கேகோறளையில் பகலகெக்கேதுளானையைச்சேர்ந்த திரிமெற்றியாவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 561.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 6 | தம்மன்னேவெவ (குளம்) | 7 2 5 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்திப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய.

II.—பிரதமபடம் 561.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 17 | திரிமெற்றியாவேவெவ (குளம்) | 74 1 17 |
| 17d | திரிமெற்றியாவேவெவகிம்ம | 0 0 9 |
| 17e | ஷை (குளம்) | 1 0 13 |
| | | 75 1 39 |

எல்லைகளாவன : வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய, கொல்பெந்தெவக் கிராமஎல்லை; தெற்கு-கொல்பெந்தெவக் கிராமஎல்லை, முடி உரித்துப்பேசும் திரிமெற்றியாவவெவகிம்ம (குளம்), கொல்பெந்தெவக் கிராமஎல்லை, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய (குளக்கட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்), பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட வெகெசபஉலக்கற (குளக்கட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்), பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட திவைம்ப, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட எகெற்றுவலகேன்யாய.

3,880 * இங்கிலீஷின் நான்காம் பாகம் 1007 to 1008 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Anuradhapura, S. O. 41—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடைமையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஆண்டு (செப்தெம்பர்) புரட்டாசி மீ 30 ம் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜோன் இன்றில் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக் குண்டெனும் உரித்தை அல்லது உடைமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜோன் இன்றில்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தைக் கேக்தேகோறளை இகலகெக்தேதுளானையைச்சேர்ந்த கொனேவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 540.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 5 | கொனேவஅக்கறவெல வெடிபிம (எல்லையில் கட்டப்பட்டகாணி) | 0 0 11 |

எல்லைகளாவன : வடக்கு-186,860 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; கிழக்கும் தெற்கும்-152,152 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கொனேவலைதுகெலே.

II.—பிரதமபடம் 540.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 6 | கொனேவஅக்கறவெலவெடிபிம (எல்லையில் கட்டப்பட்ட காணி) | 0 0 23 |

* இங்கிலீஷின் நான்காம் பாகம் 1009 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கொஸ்லலந்தகெலே; தெற்கும் மேற்கும்-152,152 ம உரிமைப்படத்திற் கண்டிருக்கும காணி.

III.—பிரதமபடம் 540.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 7 | .. | கொஸ்லலந்தகெலே (ஈகலியில் கூட்டப்பட்ட காணி) .. .. | 0 0 26 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-பாழ்நிலச்சட்டங்களின பிரகாரம முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கொஸ்லலந்தகெலே; தெற்கு-சிப்புக்குளத்திலிருந்து நம்பேவுக்குப்போகும றோட்டு; மேற்கு-152,152 ம் உரிமைப் படத்தில கண்டிருக்கும் காணி.

1881

[Uva, S. O. 9—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருக்கால் அவர்கள், 1910 ம் ஹூ (செப்டம்பர்) புரட்டாதி மீ 30 ந் திகதி முதல் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்புக் கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் புத்தலப் பகுதியில் புத்தல வெல்லவாயக் கோறளையைச்சேர்ந்த முப்பனே என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 172.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 55s | .. | கோவிலகொட .. .. .. .. | 1 3 25 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பக்கினிகொட்டுவேகேன்யாய; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட முப்பனேகமகேன்யாய; தெற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட முப்பனேகமகேன்யாய; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பக்கினிகொட்டுவேகேன (றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி).

II.—பிரதமபடம் 172.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 55u | .. | கலபிற்றலந்த .. .. .. .. | 2 2 21 |

எல்லைகளாவன: வடக்கு-முதலாவதாக விற்கப்பட்ட கலபிற்றலந்த (262,438 ம உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி); கிழக்கும் தெற்கும்-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட முப்பனேகமகேன்யாய; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பக்கினிகொட்டுவேகேன (றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி).

3,882

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1009 to 1010 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Ratnapura, S. O. 10—1910.]

இதன்பின சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஹூ செப்டெம்பர் (புரட்டாதி) மீ 30 ந் திகதி முதல் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ற்றன் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ற்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

சப்பிரகாமு மாகாணம் ரத்தினபுரி டிஸ்திரிக்கு நவதுன்கோறளையைச்சேர்ந்த கறவிற்ற என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதிகளில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 39.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 3 | .. | கோட்டேகொடே மூக்கலான, பன்னேகெதரகந்தேகேன, தெல்காயேன, வத்தேகேன, தம்மகேகேன, பில்லகந்தபொடயேன, அம்போதறகேன, புல்வெலேயேன .. .. .. .. | 175 1 6 |
| 3a | .. | தம்மகேவத்தை .. .. .. .. | 2 0 9 |
| 3b | .. | பன்னேகந்த .. .. .. .. | 39 0 0 |
| 18 | .. | தெல்காயேன்யாய, மலேகும்புறேவத்தகெல்ல, அலியாமலதென்னேயேன, உடதெனியேகேன, பெரியேகேன, பெரிகேனஇலைஇறிவெல்ல, பொத்தவிலேயேன, தெல்காயேன, துனுகெரியதெனியேகேன .. .. | 101 3 36 |
| 18a | .. | குலேனகேன .. .. .. .. | 17 0 0 |
| | | | 335 1 11 |

*இங்கிலீசின் நான்காம் பாகம் 1011 to 1013 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக

எல்லைகளாவன: வடக்கு-தென்னக்கோன் முதியான்செலாகே டிங்கிரிமகாத்மயா உரித்துப்பேசும் கோட்டேகொடதெனிய, தென்னக்கோன் முதியான்செலாகே டிங்கிரிமகாத்மயா உரித்துப்பேசும் கோட்டேகொடகும்புற, கிரியெல்லக் கிராமஎல்லை, கெலுலக் கிராமஎல்லை; கிழக்கு-வத்துப்பிற்றியக் கிராமஎல்லை, முடி உரித்துப்பேசும் பெறவக்கந்தயாய, நதாதொல என்னும் நீரோடை, முடி உரித்துப்பேசும் பெறவக்கந்தயாய; தெற்கு-முடி உரித்துப்பேசும் ஈதியகாவேனேமுக்கலான, பொள்வத்தேகே மித்துறுகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் புஞ்சிபண்டாவத்தை, மேற்படியார் உரித்துப்பேசும் மகேகும்புற, தென்னக்கோன் புஞ்சிபண்டாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மலேகும்புறஅன்வெத்தும, நதாதொல என்னும் நீரோடை, புஞ்சிபண்டா உரித்துப்பேசும் கட்டாடியகேவததெனிய, தென்னக்கோன புஞ்சிபண்டாவும மற்றவர்களும் உரித்துப்பேசும் ஊரகங்கேகும்புற, பாத்தகமுதியான்செலாகே பொகெத்திகாமியும மற்றவர்களும் உரித்துப்பேசும கட்டாயகேவத்தேகேனே; மேற்கு-கறவிற்றிகங்கை, டீ. எச். டபிள்யு. தென்னக்கோன உரித்துப்பேசும தம்மகேவத்தை, தம்மகேதொல எனனும் நீரோடை, டீ. எச். டபிள்யு. தெனனக்கோன உரித்துப்பேசும் தம்மகேகும்புற, தம்மகேதொல எனனும் நீரோடை, கறவிற்றிகங்கை, குறுதியவலதொல எனனும் நீரோடை.

II.—பிரதமபடம் 39.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 24 .. | மியனகொலேகெனிபெடகின்யாய, உள்பொரததேயேனே, கபுறுகலயாகேனே, வெலவேயேனே, பொத்தேகும்புறேயேனே, பொல்காதெனியயேனே, கிறிவிற்றியாவேயேனே, கம்பகலயாயேனே, பத்துகேயேனே, கெகெல்வெகுகேயேனே, பெனிகல்தென்யேயேனே, கபறலேயேனே அல்லது பெறவக்காதேயேனே, காலிமாவதகேயேனே, கறனகொடயாவத்தேகேனே .. .. | 209 2 32 |
| 63 .. | கமகேகின்யாய, கபறகலயேனே, பிளகந்த, பட்டல்லேயேனே, தெல்கொடகேவத்தை, றக்வத்தேயேனே, தொடங்கஹுவேயேனே, மாளலயேனே .. | 307 3 28 |
| | | 517 2 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும பெறவக்கந்தயாய, வத்துப்பிற்றியக் கிராமஎல்லை; கிழக்கு-கிவித்திகலக் கிராமஎல்லை, குமாரிகாமி உரித்துப்பேசும மொறவகால; தெற்கு-கலவானவிலிருந்து ரத்னபுரிக்குப போகும் றோட்டு, 174,757 ம உரிமைப்படத்தில் கண்டிருக்கும் காணி, ஓர் தொல என்னும நீரோட்டம், செனவிரத்தினக்காருவும் மற்றவர்களும் உரித்துப்பேசும அறம்பகேவத்தை, 174,756 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, அநுத்தபத்தனகே டிங்கிரி மகாத்மயாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும கலவானகேவத்தை, ஜாலத்கே அப்புகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் உடகேவத்தை, காப்பிற்றிகலகே குணுவும் மற்றவர்களும் உரித்துப்பேசும மியனகேவத்தை, எந்தமகே கிறிவர்ணகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும ஜயவீரகேவத்தை, அநுத்தபத்தனகே டிங்கிரி மகாத்மயாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும தென்னகோன்கேவத்தை, கறவிற்றிகங்கை ஆறு, தறனகே டிங்கிபபா உரித்துப்பேசும் பிற்றியகஹேனக்தேவத்தை, ஓர் கன்சபாவ றோட்டு, அநுத்தபத்தனகே டிங்கிரிமகாத்மயா உரித்துப்பேசும் தொடங்கஹுவேகேனேவத்தை, கிங்கியனகே டிங்கிரிகாமி உரித்துப்பேசும தொடங்கஹுவேகேனேவத்தை, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும காகப்பஹேகும்புற, கேவாகே தெனிகா உரித்துப்பேசும நித்தவாவத்தை, ஓர் கன்சபாவ றோட்டு; மேற்கு-காவலமுதியான்செலாகே புஞ்சிமகாத்மயாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் காவலகேகேனே, ஓர் கன்சபாவ றோட்டு, 242,202 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, குறுந்துகதொலா, டீ. எச். டபிள்யு. தென்னக்கோன் உரித்துப்பேசும வெல்பிற்றஉடமுன்னேவத்தை, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கமகேகேனேஒகந்தவத்தை, 66,553 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, டீ. எச். டபிள்யு. தென்னக்கோன் உரித்துப்பேசும வெல்பிற்றஉடமுன்ன, டீ. எச். டபிள்யு. தென்னக்கோன் உரித்துப்பேசும படகலயாதெனிய, டீ. எச். டபிள்யு. தென்னக்கோன உரித்துப்பேசும வெல்பிற்ற உடமுள்ள, பாத்தக முதியான்செலாகே மொகொத்திகாமி உரித்துப்பேசும கப்புறுகலயாயேகும்புற, பாத்தக்க முதியான்செலாகே புஞ்சிமகாத்மயாவும் மற்றவர்களும உரித்துப்பேசும வில்பிற்றஅன்வெத்தும, பாத்தக்க முதியான்செலாகே புஞ்சிமகாத்மயாவும் மற்றவர்களும உரித்துப்பேசும் கட்டாடிகும்புறே பிற்றஅன்வெத்தும, தென்னக்கோன டிங்கிரிமகாத்மயா உரித்துப்பேசும் பொத்தேகும்புற, தென்னக்கோன் முதியான்செலாகே டிங்கிரிபண்டா உரித்துப்பேசும் பீலிகும்புறஅன்வெத்தும, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும தம்மேகும்புற, அறயின்னே லெபிமவும மற்றவர்களும் உரித்துப்பேசும் மெதகொடெல்லவத்தை, தென்னக்கோன் டிங்கிரிமகாத்மயா உரித்துப்பேசும் பொல்காதெனிய, பாத்தகமுதியான்செலாகே மொகொத்திகாமி உரித்துப்பேசும பங்விலகேகும்புற அல்லது கந்தறவியத்த, தொல ஆறு, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும கிறிவிற்றியாயேஓவிற்ற, கறவிற்றிகங்கை ஆறு, பாத்தகமுதியான்செலாகே வஸ்துகாமி உரித்துப்பேசும் கறனகொடவத்தை, பாத்தக்கமுதியான்செலாகே வஸ்துகாமி உரித்துப்பேசும் கறனகொடவத்தேகும்புற, கறவிற்றிகங்கை ஆறு, தொல ஆறு.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள், இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும் அவைகளின் விசாலத்தொகையாகும் 2 ஏக்கர் 37 பேர்ச்சும் முன்குறித்த 517 ஏக்கர் 2 றூட் 20 பேர்ச்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதமபடம் 39.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 24a .. | கொலதிவியன்கடவத்தை .. .. .. | 0 1 2 |
| 49 .. | திவிகொட்டுவேகேனே .. .. .. | 1 0 35 |
| 54 .. | ஜம்புகாஸியத்த .. .. .. | 0 0 30 |
| 55 .. | றக்வத்தை .. .. .. | 0 2 10 |
| | | 2 0 37 |

III.—பிரதமபடம் 39.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 42 .. | பட்டயென்யாய, கல்ஓவிற்றகேனே, அமுனதொலேகேனே அல்லது கல்பொத்தேகேனே, மெல்லனயாவத்தேகேனே, பட்டகேனே, பகலவெலேகேனே, தெஹிகஸ்பெலைசேகேனே, றக்அத்தனவெலேகேனே, காகாஓக்கந்தேதெனிய, இந்துறுவிற்றிகலகேனே, இந்துறுவிற்றகலபகாகேனே, எத்தாமலகேனே .. | 117 1 11 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் கபுகேவத்தெமுக்கலான, பாத்தகமுதியான்செலாகே வஸ்துகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பங்விலதெனிய, ஹப்பகிங்கே றத்திறங்காமி உரித்துப்பேசும் கொறக்காதெனிய, ஹப்பகிங்கே றத்திறிங்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மியனகாபெலெஸ்ச, மேற்படியார் உரித்துப்பேசும் தெகிபெலைசேஓவிற்ற, அலுபொத்தொல என்னும் நீரோட்டம் கன்சபாவ றோட்டு, டி. எச். டபிள்யு. தென்னக்கோன்

உரித்துடைபேசும் வெகேபன்னமெகேனேவத்தை; கிழக்கு-டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் இன்னொருவரும் உரித்துப்பேசும் மிதெல்லாவகம, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கல்வெத்தமகம்புற, பாத்தக்குமுதியான்செலாகே சேததுஙாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பிற்றபுறனேகும்புற, பாத்தக்குமுதியான்செலாகே மொகொத்திகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஆச்சாரிகேகும்புற, மேற்படியார் உரித்துபேசும் பட்டுகே தேனிய, வெகெல்வத்தையிலுள்ள ஐயசுந்தர முதியான்செலாகே டிங்கிரிமெனிக்கா உரித்துப்பேசும் றணகேகேனிய, மேற்படியார் உரித்துப்பேசும் விகதகலவதுறட, ஐயசுந்தர முதியான்செலாகே டிங்கிரிமெனிக்கா உரித்துப்பேசும் எலகொடவத்தை, மேற்படியார் உரித்துப்பேசும் கல்பொத்தேவத்தை, பாத்தகமுதியான்செலாகே மொகொத்திகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பறனகெதறவத்தை, கிராமிகளுக்குரிய காமறங்கவதமே, டீ. எச். டபிள்யு. தென்னக்கோனும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பண்டாறவத்தை, வெதஞகே நம்மல்சாமி உரித்துபபேசும கொறட்டுவத்தை, தகைவத்தேலாகே இனு உரித்துபபேசும பிற்றகொறட்டுவ, கல்ககதொல என்னும் நீரோட்டம்; தெற்கு-கல்கதொல என்னும் நீரோட்டம், முடி உரித்துப்பேசும கறவிற்றகந்தேமுக்கலான, எல என்னும் நீரோடை, ஓர் வாய்க்கால், படாலகே விதானேகமிகேயும் மற்றவர்களும் உரித்துப்பேசும பெகலெனகாவத்தை ஓர் காலடிப்பாதை; மேற்கு-முடி உரித்துப்பேசும கறவிற்றகந்தேமுக்கலான, அலுபொத்ததொல என்னும் நீரோட்டம, முடி உரித்துப்பேசும கப்புகேவகதேமுக்கலான.

3,883

---

[Urumutta, Matara District.]

இதின்கீழ் சொல்லப்படும் காணிகளுக்கு உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1910 ம் ஞூ (செப்டெம்பர்)மீ 30 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், மாத்துறை உதவி அரசாட்சி ஏஜண்ட் துரை அவர்கள் முகதாவில் தெரிவித்து, சொல்லிய காணிகளுக்கு அல்லது அதில் ஒன்றுக்கு அல்லது அதில் ஒரு பங்குக்கு தங்களுக்கு உண்டெனும் உரிமையை அல்லது உடைமையைத் தெரிவியாவிடில், சொல்லிய உதவி அரசாட்சி ஏஜண்ட் அவர்கள், 1897, 1899, 1900, 1903 ம ஆண்டுகளின் வெளிநிலச் சட்டங்களால் தமக்கு உண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகள் அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

மாத்துறைக் கச்சேரி,
1910 ம் ஞூ அகொஸ்துமீ 19 ந் உ.

டபிள்யு. எல். கின்டேர்ஸ்லி,
மாத்துறை உதவி ஏஜண்ட்.

காணிகளின் விபரம்.

தென்மாகாணம் மாத்துறை டிஸ்திரிக்கு கங்கபொடபத்துவையைச்சேர்ந்த உருமுத்த யெனும் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் உறுதிப்படுத்திய *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

I.—பிரதிப்படம் 68.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 70 .. | முறுதகஹகொடல்லகும்புற .. .. — | 0 0 22 |

எல்லைகளாவன: வடக்குக்கும், கிழக்குக்கும், தெற்குக்கும்-விதுகே தொன் ஹேன்றிக்குடைய படகடியஹேன்யாய; மேற்குக்கு-துனறதனதெருண்ணுனசேக்கும் மற்றவர்களுக்கும் உடைய முறுதகஹகொடல்லேயில் ஓர் துண்டு.

II.—பிரதிப்படம் 68.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 135 .. | கிறிமடிஹுக்க .. .. .. | 0 0 25 |

எல்லைகளாவன: வடக்குக்கு-240,716 ம் படத்தில் விவரித்திருக்கும் காணி; கிழக்குக்கு-240,716 ம் படத்தில் விவரிக்கப்பட்ட கிறிமடிஹுககதொள; தெற்குக்கு-240,716 ம் படத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் காணி; மேற்குக்கு-240,737 ம் படத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் நிலம்.

3,884 * இங்கிலீஸின் நான்காம் பாகம் 1013 to 1014 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

---

[Tender for the Supplying Milk to Nuwara Eliya Hospital.]

நுவரெலி ஆசுப்பத்திரிக்கு 1911 ம் ஆண்டு ஜனுவரி மீ முதல் தேதி துவக்கம 1912 ம் ஆண்டு ஜூனிமீ 30 ந் தேதி வரைக்கும் பசுப்பால் கொடுக்கக் கொந்திறுத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு பிரதிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கச்சேரி (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கச்சேரியில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின புறத்தில் இடதுகை மேல்மூலையில் "நுவரெலி (Nuwara Eliya) ஆசுப்பத்திரிக்குப் பசுப்பால் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேணடும் கேள்விக்கடதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கச்சேரில 1910 ம் ஞூ ஐப்பசிமீ 18 ந் தேதி மத்தியானத்துக்கும் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்[illegible] கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக்கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இதற்[illegible] கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று [illegible] அமைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இத்தக் கேள்விப்பத்[illegible]ரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும் [illegible] அப்படிச் செய்யாதவிடத்தில் கேள்வி சரியென ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்[illegible] ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் ஐம்பது (50) ரூபா முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் [illegible] பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திறுத்துக்கேள்வி எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்தி[illegible]த்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக்கட்டப்பட்ட காசு முடிக்காகவிடு[illegible]. அப்படிக்கட்டப்பட்ட கொந்திறுத்துக்காரனின்பேர் கவன்மேந்தில் யாதொரு கொந்திறுத்தும கொடுக்க வொமல் அர[illegible]ட்சியாரின பத்திரிகையில (Defaulting List) போடப்படும கொந்திறுத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்[illegible]பந்தக்காரன் கையொப்பம வைத்ததன்மேல் ஒதுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறுத்துக் கேள்விக்காரர் கட்டிய ப[illegible]ணத்தொகை முழுவதும அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

8494

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கோர்திருத்த ஒப்பந்தக்காரன் பணப்பிணை ரூபா நூறு கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு,
1910 ம் ஆண்டு புரட்டாதிமீ 21 ந உ.

(கையொப்பம்) சீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசருக்காக.

---

[Tender for Toll Rents, Puttalam District.]

"புத்தளம் டிஸ்திறிக்கின் 1911 ம் ஆண்டு தைமீ 1 ந் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி முடிவாகும் ஆயக்குத்தகைகளை விலைக்குவாங்க" வென்று மேலுறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை டென்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களால் 1910 ம் ஆண்டு ஐப்பசிமீ 26 ந் தேதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படுமென் றித்தால் அறிவிக்கப்படுகின்றது.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

1. கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஆயக்குத்தகைகளை வெவ்வேறாய்க் கேள்விப்பத்திரங்கள் எழுதிக் கட்டவேண்டும்.

ஆத்து குத்தகை.

1. பாலாவி.

துறைக் குத்தகை.

2. கற்பிட்டி முகத்துவாரம்.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் 1 ம் ஆத்துகுத்தகைக்கு கச்சேரியில் ரூபா 50 வீதம் கட்டவேண்டும். மேலும் 2 ம் துறைக் குத்தகைக்கு ரூபா 5 கட்டவேண்டும். அவ்விதமே காசுகட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விக்காரனுடைய கேள்வியை ஏற்றுக்கொண்டால் விற்பனவிலன்று கொள்விலையின் பத்திலொருபங்கு ரொக்கங் கட்டத்தவறினாலும், மேலும் தேசாதிபதியவர்கள் அக்கேள்வியை ஏற்றுக்கொண்டால் அச்சம்மதியை அறியக்கொடுத்த முப்பது நாளைக்குள்ளாக சரியான் பிணைகொடுக்கத் தவறினாலும், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

3. கொந்தீசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப்பதிலாக புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

4. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்க வேண்டியது.

5. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கு அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கும் அனுப்புஞ்சமயம் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

6. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

7. பிணைக்காகக் கட்டும் சீட்டுகளைப் பரிசோதிக்க முடிமந்திராலோசனைச் சங்கத்தின் செலவுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனால் கட்டவேண்டும்.

கேள்விப்பத்திரம் அல்லது பத்திரங்களை எல்லாம் யாதொரு கேள்வி அன்றி தள்ளிப்போடுகிறதற்குத் தத்துவும் அரசாட்சியாருக்குண்டு.

உவி. கெ. ஹ. காம்பெல்,
அரசாட்சி ஏசன்று.

குருநாக்கல் கச்சேரி,
1910 ம் வருடம் புரட்டாதிமீ 24 ந உ.

---

[Proclamation relating to Irrigation Ordinance (No. 16) of 1906.]

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்துமாகிய ஐக்கிய இராச்சியத்திற்கும், கடல்களுக் கப்புறத்தனவாகிய பிரிட்டிஷ் ஆதிபத்திய நாடுகளுக்கும் ராஜாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்கள் நாமத்தினாலே:
சென்ற் மைக்கேலினதும் சென்ற் ஜோர்ஜ்ஜினதும் மிக மேன்மைபொருந்திய வரிசையின் கிறன்ட் குறேஸ் நயிற் பட்டவர்த்தனரும் இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய மாட்சிமைபொருந்திய சேர் ஹென்றி மெக்கல்லம்அவர்கள் செய்யும்

விளம்பரம்.

ஹென்றி மெக்கல்லம்.

க௯௦௬ ம் ஆண்டின் க௬ ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் ௫௬ ம் பிரிவின் பிரகாரம் நமக்குக் கையளிக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு மந்திராலோசனைச் சங்கத்தாரின் அனுமதியுடன் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் இத்துட னிணைக்கப்பட்டிருக்கும் இடாப்பில் விபரித்திருக்கும் இராசாங்கத்தாரால் கட்டுவிக்கப்பட்ட நீர்ப்பாய்ச்சலுக்கான வேலைகளை க௯க௦ ம் ஆண்டு ஆவணிமீ க ந் திகதிக்குப் பின்னாக நீர்ப்பாய்ச்சல்த்தலைவரின் ஆளுகைக்கும் பராமரிப்புக்கும் கீழ்விடப்படுமென்று இத்தால் விளம்பரஞ்செய்கின்றோம்.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டு புரட்டாதிமாதம் இருபத்தொன்பதாந் திகதியாகிய இன்று இலங்கைத்தீவில் கொழும்புநகரிற் கொடுக்கப்பட்டது.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,
எச். எல். கிறவ்பொர்டு,
அக்டிங் இராசாங்க லிகிதர்.

இராஜாவைத் தேவன் காப்பாற்றுவாராக.

---

இடாப்பு.

கீழ்மாகாணம் மட்டுக்களப்பு டிஸ்திறிக் என்று சொல்லப்பட்டு பாணகைப்பகுதியையும் உட்படுத்திய தென்பிரிவைச் சார்ந்த நீர்ப்பாய்ச்சல் வேலைகளாகிய :

(1) பாணகைக்குளம். (2) லகுகலைக்குளம். (3) நாவுலக்குளம்.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.